## இனிமையான குழந்தைகளே! பாபாவை அன்புடன் நினைவு செய்து கொண்டே இருங்கள், எப்பொழுதும் ஸ்ரீமத்படி நடந்து கொண்டே இருங்கள், படிப்பின் மீது முழுமையாக கவனம் கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு எல்லோருமே மதிப்பு அளிப்பார்கள்.

கேள்வி: எந்த குழந்தைகளுக்கு அதீந்திரிய சுகத்தின் அனுபவம் ஏற்பட முடியும்?

பதில்: (1) யார் தேஹி அபிமானியாக (ஆத்ம உணர்வுடையவர்களாக) இருக்கிறார்களோ அவர் களுக்கு அனுபவம் ஆகும். இதற்காக எவரிடமாவது உரையாடுகிறீர்கள் அல்லது அவருக்கு ஏதாவது புரிய வைக்கிறீர்கள் என்றால் நான் சகோதர ஆத்மாவிடம் உரையாடுகிறேன் என்று உணர்ந்து இருங்கள். சகோதர சகோதரர் என்ற பார்வையை உறுதிப்படுத்துவதால் ஆத்ம அபிமானி ஆகிக் கொண்டே செல்வீர்கள். (2) நாம் பகவானின் மாணவர்கள் என்று யாருக்கு போதை இருக் கிறதோ அவர்களுக்குத் தான் அதீந்திரிய சுகத்தின் அனுபவம் ஆகும்.

பாடல்: யார் என் மன வாசலுக்கு வந்தார்.. .. ..

ஓம் சாந்தி. தந்தை வந்து குழந்தைகளுக்கு புரிய வைக்கிறார். தந்தை குழந்தைகளுக்குப் புரிய வைக்கிறார் என்று வேறு எந்த இயக்கத்திலும் கூறமாட்டார்கள். உண்மையில் அனைத்து குழந்தை களின் தந்தை ஒரே ஒருவர் தான் என்பதை குழந்தைகள் அறிந்துள்ளார்கள். அனைவரும் சகோதரர் கள் ஆவார்கள். அந்த தந்தையிட மிருந்து அவசியம் குழந்தைகளுக்கு ஆஸ்தி கிடைக்கிறது. சக்கரத்தைப் பற்றி கூட நீங்கள் நல்ல முறையில் புரிய வைக்கலாம்- இது சங்கமம் ஆகும். இப்பொழுது தான் முக்தி மற்றும் ஜீவன் முக்தி கிடைக்கிறது. குழந்தைகளாகிய நீங்கள் ஜீவன் முக்தியில் செல்வீர்கள். பிறகு மற்ற அனைவரும் முக்தியில் செல்வார்கள். அவருக்குத் தான் சத்கதி தாதா, லிபரேட்டர் (விடுவிப்பவர்) கைடு (வழிகாட்டி) என்று கூறப்படுகிறது. இராவண இராஜ்யத்தில் எவ்வளவு ஏராளமான மனிதர்கள் இருக்கிறார்கள்! இராம இராஜ்யத்தில் ஒரே ஒரு ஆதி சனாதன தேவி தேவதா தர்மம் இருந்தது. அதற்கு "ஆரிய" மற்றும் "அனாரிய" என்கிறார்கள். "ஆரிய" என்றால் சீர்திருந்தியவர்கள் மற்றும் திருந்தாமலிருப்பவர்களுக்கு "அன் ஆரிய" என்று கூறப்படுகிறது. திருந்தியவர் களிலிருந்து கெட்டு போனவர்களாக எப்படி ஆனார்கள் என்பதன் பொருள் கூட யாருக்கும் தெரியாது. "ஆரிய" என்று எந்த ஒரு தர்மமும் இருக்கவில்லை. சீர்திருந் தியவர்களாக இந்த தேவதைகள் இருந்தார்கள். பிறகு 84 பிறவிகளுக்கு பிறகு கெட்டு போனவர் களாக ஆகிறார்கள். யார் உயர்ந்ததிலும் உயர்ந்தவர்களாக பூஜிக்கத் தக்கவர்களாக இருந்தார்களோ அவர்களே பூசாரி ஆகி விட்டுள்ளார்கள்! ஹம்சோ (நாமே அது) என்பதன் பொருள் கூட தந்தை தான் புரிய வைக்கிறார். ஏணி படி மீது புரிய வைப்பது மிகவும் நன்றாக உள்ளது. அப்படி இன்றி ஆத்மாவே பரமாத்மா, பரமாத்மாவே ஆத்மா என்பதல்ல. இதுவோ விராட நாடகம் ஆகும். நாமே பூஜிக்கத்தக்கவர்களாக இருந்தோம். பிறகு பூசாரி ஆனோம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். அதாவது நாமே தேவதை பிறகு நாம் தான் க்ஷத்திரியர்.... ஆகிறோம். அவசியம் ஏணி படியில் படியோ இறங்கி வருவோம் அல்லவா? 84

பிறவிகள் யார் எடுக்கிறார்கள் என்ற கணக்கு கூட உள்ளது. நீங்கள் உங்கள் பிறவிகள் பற்றி அறியாமல் உள்ளீர்கள், நான் உங்களுக்குக் கூறுகிறேன் என்று தந்தை கூறுகிறார். இது சக்கரம் ஆகும். அதில் நாம் தான் அதே தேவதையாக, க்ஷத்திரியர் ஆகியோராக ஆகிறோம். 21 பிறவிகள் என்பதோ பிரசித்தமானதாகும். மனிதர்களோ இந்த விஷயங்களை அறியாமலே உள்ளார்கள். தமோ பிரதானமாக உள்ளார்கள். இப்பொழுது குழந்தைகளாகிய உங்களுக்குக் தான் முழு ஞானம் கிடைக்கிறது. ஆனால் புரிந்து கொள்பவர்கள் மிகவும் அரிதாக உள்ளார்கள். அதனால் தான் கோடியில் ஒருவர் தான் வந்து ஞானம் எடுப்பார்கள் மற்றும் தேவதா தர்மத்தினராக ஆகிவிடுவார்கள் என்று கூறப்படுகிறது. இதில் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. சக்கரம் பற்றி புரிய வைப்பது சுலபமாகும். இது சத்யுகம், இது கலியுகம்.. ஏனெனில் சத்யுகத்தில் மிகவும் குறைவான எண்ணிக்கையில் தான் இருப்பார்கள். மரம் சிறியதாக இருக்கும். பின்னர் விருத்தி அடைகிறது இந்த விருட்சம் பற்றி யாருக்குமே தெரியாது. மேலும் பிரம்மாவின் விஷயத்தைப் பற்றியும் புரிந்து கொள்வது அவர்களுக்கு கடினமாக உள்ளது. பிரம்மா முக வம்சாவளி பிராமணர்களோ அவசியம் வேண்டுமென கூறுங்கள். இவர்கள் தத்து எடுக்கப்பட்ட குழந்தைகள் ஆவார்கள். அந்த பிராமணர்கள் குகவம்சாவளி ஆவார்கள். இந்த பிராமணர்கள் முக வம்சாவளி ஆவார்கள். இது அந்நிய இராவண இராஜ்யம் ஆகும். தந்தை வந்து இராம இராஜ்யத்தை ஸ்தாபனை செய்ய வேண்டி உள்ளது. எனவே எவருக்குள்ளாவது பிரவேசம் செய்வார் அல்லவா? பாருங்கள்! இந்த விருட்சத்தில் முற்றிலும் கடைசியில் நின்றுள்ளார். இவருடைய பட்டுப்போன நிலை ஆகும். நான் அநேக பிறவிகளின் கடைசி பிறவியில் பிரவேசிக் கிறேன் என்று தந்தை கூறுகிறார். இது கடைசி 84வது பிறவி ஆகும். தபஸ்யை செய்து கொண்டிருக்கிறார். நாம் இவரை கடவுள் என்று கூறுவதில்லை. உலகத்தாரோ இறைவனை சர்வவியாபி என்று கூறி கல், மண் அனைத்திலும் உள்ளார் என்று கூறி விட்டனர். எனவே தாங்களும் முழுமையாக கல் போல ஆகி விட்டார்கள். தேவதைகளின் விஷயமோ தனிப்பட்டது ஆகும். இப்பொழுது நீங்கள் படித்து இந்த பதவியை அடைகிறீர்கள். எவ்வளவு உயர்ந்த படிப்பு ஆகும்!. இந்த தேவதைகளுக்கு பகவான் பகவதி என்றும் கூறுகிறார்கள். ஏனெனில் தூய்மையாக உள்ளார்கள். மேலும் சுயம் பகவான் மூலமாகத் தான் இந்த தர்மத்தின் ஸ்தாபனை ஆகி உள்ளது. எனவே அவசியம் பகவான் பகவதியாக ஆகி இருக்க வேண்டும். ஆனால் அவர்களுக்கு மகாராணி மகாராஜா என்று கூறப்படுகிறது. மற்றபடி ஸ்ரீலட்சுமி நாராயணருக்கு பகவதி பகவான் என்று கூறுவது கூட குருட்டு நம்பிக்கை ஆகும். ஏனெனில் பகவானோ ஒரே ஒருவர் தான் அல்லவா? நீங்கள் சிவன் மற்றும் சங்கரனைக் கூட தனித் தனி என்று கூறி விளக்குகிறீர்கள். இதன் காரணமாக இவர்கள் கூறுவது தேவதைகளை கூட இல்லாமல் செய்து விடுகிறார்கள். உங்கள் புத்தியிலோ முழு சக்கரம் உள்ளது. ஆனால் யார் மகாரதிகளாக இருக்கிறார்களோ அவர்களே நல்ல முறையில் புரிய வைக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். நிறைய பேர்கள் ஞானம் கேட்கிறார்கள் என்றாலும் கூட அவர்களது புத்தியில் நிலைப்பதில்லை பின் அவர்கள் என்ன ஆவார்கள்? பைசா மதிப்புள்ள தாசர், தாசிகளாக ஆகிவிடுவார்கள். வருங்காலத்தில் உங்களுக்கும் சாட்சாத்காரம் ஆகும். ஆனால் அந்த நேரத்தில் எதுவும் செய்ய முடியாமல் போய் விடும். நேரம் முடிந்து விட்ட பிறகு என்ன செய்ய முடியும்? எனவே பாபா எச்சரிக்கை கொடுத்துக் கொண்டே இருக்கிறார். ஆனால் எல்லோருமே

உயர்வானவர்களாகிவிடுவது என்பது ஆக முடியாது. பாத்திரம் சுத்தமாக இல்லை. புத்தியில் குப்பை கூளம் நிரம்பி உள்ளது. இதில் மிகவும் நல்ல முயற்சி வேண்டும். படங்கள் மீது புரிய வைப்பதற்கான மிகவும் நல்ல அப்பியாசம் செய்ய வேண்டும். இல்லையென்றால் கடைசியில் பச்சாதாபப்பட வேண்டி இருக்கும். இது ஆத்மாவிற்கு உணவு கிடைத்துக் கொண்டிருக்கிறது. இதுவோ அனைவருக்கும் புரிய வைக்க வேண்டிய விஷயங்கள் ஆகும். பயப்பட வேண்டிய எந்த விஷயமும் கிடையாது. பெரிய பெரிய இடங்களில் கண்காட்சி, மியூசியம் அமைப்பதால் பெயர் பிரபலமடையும். எல்லோரிடமும் அபிப்பிராயம் எழுதி வாங்குங் கள், அதையும் பிரசுரிக்க வேண்டும் என்று பாபா கூறி இருந்தார். குழந்தைகள் நிறைய சேவை செய்ய வேண்டும். இதில் சோதனை கூட நிறைய செய்ய வேண்டும் - புரிந்து கொள்பவர்களா இல்லையா என்று. இது புதிய உலகம் ஆகும். இது பழைய உலகம் ஆகும். இதை யாருமே புரிந்து கொள்ளலாம். காலத்தை நீண்டதாக ஆக்கி விட்டுள்ளார்கள் அவ்வளவே. எனவே மனிதர்கள் குழம்பி விட்டார்கள். முதன் முதலில் தந்தையின் அறிமுகம் கொடுக்க வேண்டும். யார் (தேஹி அபிமானி) ஆத்மா உணர்வுடன் கூடியவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்குத் தான் அதீந்திரிய சுகம் இருக்க முடியும். சொற்பொழிவு ஆற்றுவதால் மட்டுமே காரியம் ஆகாது. சொற்பொழிவு நிகழ்த்தும் பொழுது கூட நான் சகோதர ஆத்மா, எனது சகோதர ஆத்மாவிற்குப் புரிய வைக்கிறேன் என்று உணர்ந்திருக்க வேண்டும். ஆத்ம அபிமானி ஆவது - இதில் மிகுந்த உழைப்பு வேண்டும். ஆனால் குழந்தைகள் அடிக்கடி மறந்து விடுகிறார்கள். தந்தை தான் வந்து குழந்தைகளுக்குப் புரிய வைக்கிறார். ஆத்மா பரமாத்மா பிரிந்திருந்தார்கள் என்ற பாடலும் உள்ளது. இதனுடைய பொருளைக் கூட உங்களால் தான் புரிந்து கொள்ள முடிகிறது. யார் மகாரதிகளாக இருக்கிறார் களோ அவர்கள் தங்களை ஆத்மா என்று உணர்ந்து தந்தையை நினைவு செய்வதற்கான மிகுந்த அப்பியாசம் செய்ய வேண்டும். அப்பொழுது தான் தங்களை (பவர்ஃபுல்) சக்தி நிறைந்தவராக உணருவீர்கள். யார் தங்களை ஆத்மா என்றே உணருவதில்லையோ அவர்கள் என்ன தாரணை செய்வார்கள். நினைவினால் தான் உங்களுக்குள் சக்தி நிரம்பும். ஞானத்திற்கு பலம் என்று கூறப்படுவதில்லை. யோக பலம் என்று கூறப்படு கிறது. யோக பலத்தினால் தான் நீங்கள் உலகிற்கு அதிபதி ஆகிறீர்கள். இப்பொழுது நீங்கள் அநேகரை தனக்கு சமானமாக ஆக்க வேண்டும். அநேகரை தனக்கு சமானமாக ஆக்காதவரை விநாசம் ஏற்பட முடியாது. பெரிய போர் மூண்டு விட்டாலும் கூட பிறகு நின்று விடுகிறது. இது போல ஆகிக் கொண்டே இருக்கிறது. இப்பொழுதோ நிறைய பேரிடம் குண்டுகள் உள்ளன. ஆனால் இவை அவ்வாறே வைப்பதற்கான பொருட்கள் அல்ல. பழைய உலகத்தின் விநாசம் மற்றும் ஒரு ஆதி சனாதன தர்மத்தின் ஸ்தாபனை அவசியம் ஏற்படப் போகிறது. சிறிது காலத்திற்குப் பிறகு "உண்மையில் இது அதே மகாபாரத போர் ஆகும்" என்று எல்லோரும் கூறுவார்கள். பகவான் கூட அவசியம் இருக்கிறார். உங்களிடம் நிறைய பேர் வந்து விடும் பொழுது எல்லோரும் ஏற்றுக் கொள்ள முற்பட்டு விடுவார்கள். இவர்களோ விருத்தி அடைந்து கொண்டே போகிறார்கள். இவர்களிடம் நிறைய சக்தி உள்ளது என்பார்கள். நீங்கள் எந்த அளவு நினைவில் இருப்பீர்களோ அந்த அளவு உங்களுக்குள் பலம் நிரம்பும். தந்தையின் நினைவின் மூலமாகத் தான் நீங்கள் மற்றவர்களுக்கு (லைட்) ஒளி அளிக்கிறீர்கள். இந்த தாதா (பிரம்மா) கூட "என்னை விடவும் இந்தக் குழந்தைகள் மிகவும் நன்றாக சேவை செய்கிறார்கள்" என்கிறார். இப்பொழுது சிறிது தாமதமாகிறது. யோகத்தில் சரியான முறை யில்

யாராலும் இருக்க முடிவதில்லை. "யோகத்தில் நாங்கள் குறைவாக இருக்கிறோம். அதனால் உண்மையில் அம்பு போல பதிவதில்லை" என்று சுயம் தாங்களே உணர்ந்து இருக்கிறார்கள். பகவான் குமாரிகளுக்குள் ஞான அம்பு நிரப்புகிறார். நீங்கள் பிரஜா பிதா பிரம்மா குமார் பிரம்மா குமாரிகள் ஆவீர்கள் அல்லவா? இவர் பிரம்மா ஆவார். நீங்கள் தத்து எடுக்கப்பட்ட குழந்தைகள். படைப்பவரோ ஒரே ஒருவர் தான். மற்ற எல்லோரும் படித்து கொண்டிருக்கிறார்கள். அதில் இந்த பிரம்மாவும் வந்து விட்டார். பிறகு இது படைப்பு ஆகிறது அல்லவா? நீங்கள் தேவதை ஆகக் கூடியவர்கள். தெய்வீக குணத்தை தாரணை செய்து கொண்டிருக்கிறீர்கள். ஒரு சில இடங்களில் இரண்டு சக்கரங்கள் (கணவன் மனைவி) சேர்ந்து ஓட முடியாமல் உள்ளன. மணலில் நின்று விட்டுள்ளது போல. பாபா பெயர் கூறுவதில்லை. இல்லை என்றால் பாபா உண்மையைக் கூறுகிறார் என்று புரிந்திருக்க வேண்டும். தங்களுக்குள் வேலை செய்து கொண்டிருக்கும் குழந்தைகள் கூட ஒருவர் மற்றவரின் சுபாவத்தை அறிந்திருப்பார்கள்.

நாம் தான் தலையில் கிரீடம் அணிந்தவராக இருந்தோம் என்று குழந்தைகள் புரிந்துள்ளார்கள். இப்பொழுது மீண்டும் ஆகிறோம். முதலில் நீங்கள் யாருக்காவது புரிய வைக்கும் பொழுது ஏற்றுக் கொள்ள தயாராக இருப்பதில்லை. பிறகு மெது மெதுவாக புரிந்து கொள்கிறார்கள். இதில் மிகுந்த யுக்தி வேண்டும். ஆத்மாவில் புத்தி உள்ளது. ஆத்மா சத்-சித்-ஆனந்த சொரூபமாக உள்ளது. இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் ஆத்ம உணர்வுடையவர்களாக ஆக்கப்படுகிறீர்கள். தந்தை வராத வரை யாருமே ஆத்ம அபிமானியாக ஆக முடியாது. ஆத்ம அபிமானி பவ என்று இப்பொழுது தந்தை கூறுகிறார். என் ஒருவனை நினைவு செய்யுங்கள். அப்பொழுது என்னிட மிருந்து சக்தி கிடைக்கும். இந்த தர்மம் மிகவும் சக்தியுடையது. முழு உலகத்தின் மீது ஆட்சி புரிகிறீர்கள். குறைவான விஷயமா என்ன? தந்தையிடம் நினைவின் தொடர்பு கொள்ளும் பொழுது உங்களுக்கு பலம் கிடைக்கிறது. இது புதிய விஷயம் ஆகும். இதை நல்ல முறையில் புரிய வைக்க வேண்டி உள்ளது. ஆத்மாக்களின் எல்லையில்லாத தந்தை அவரே ஆவார். அவரே புதிய உலகத்தின் படைப்புகர்த்தா ஆவார். எனவே சிவன் வந்து என்ன செய்கிறார் என்று அவரது காரியத்தைப் பற்றி புரிய வையுங்கள். கிருஷ்ண ஜெயந்தி மற்றும் சிவ ஜெயந்தி இரண்டையும் கொண்டாடுகிறார்கள். இப்பொழுது இருவர்களில் பெரியவர் யார்? உயர்ந்ததிலும் உயர்ந்தவர் நிராகாரமானவர் ஆவார். சிவஜெயந்தி கொண்டாடப்படுகிறது என்றால் அவர் வந்து என்ன செய்திருந்தார்? கிருஷ்ணர் என்ன செய்தார்? பரமபிதா பரமாத்மா சாதாரண வயோதிக உடலில் வந்து ஸ்தாபனை செய்கிறார் என்று எழுதப்பட்டுள்ளது. அநேக விதமான கொள்கைகள் வழிகள் உள்ளன. ஸ்ரீமத் என்பதோ ஒன்றே ஆகும். அதன் மூலம் நீங்கள் உயர்ந்தவர் ஆகிறீர்கள். மனித வழி மூலம் எப்படி உயர்ந்தவர் ஆக முடியும். இந்த ஈஸ்வரிய வழி உங்களுக்கு ஒரே ஒரு முறை சங்கமத்தில் கிடைக்கிறது. தேவதைகள் வழிமுறை கூறுவதில்லை. மனிதனிலிருந்து தேவதை ஆகி விட்டார்கள் அவ்வளவே. முடிந்து விட்டது. அங்கு குரு ஆகியோரை கூட வைக்க மாட்டார்கள். இங்கு மனிதர்கள் குருவிடம் வழி கேட்கிறார்கள். எனவே நாம் இராஜயோகி ஆவோம் என்று யுக்தியுடன் புரிய வைக்க வேண்டும். ஹட யோகிகள் ஒரு பொழுதும் இராஜ யோகம் கற்பிக்க முடியாது. அவர்கள் இருப்பதே துறவற மார்க்கத்தினராக. தீர்த்தங்களில் இல்லற

மார்க்கத்தினர் தான் செல்ல வேண்டும்.

குழந்தைகளாகிய நீங்கள் எந்த ஒரு விஷயத்திலும் குழம்பமடையக் கூடாது. இந்த நாடகம் ஏற்கனவே அமைக்கப்பட்டது ஆகும். அது மீண்டும் மீண்டும் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. உங்களது சேவை கூட முந்தைய கல்பத்தைப் போலவே நடந்து கொண்டிருக்கிறது. நாடகம் தான் உங்களை புருஷார்த்தம் (முயற்சி) செய்விக்கிறது. அதுவும் நீங்கள் முந்தைய கல்பத்தைப் போலவே செய்கிறீர்கள். முயற்சி செய்பவர்களின் நடத்தை மூலமாக நீங்கள் புரிந்து கொள்ள முடியும். கண்காட்சியில் வருபவர்களின் கூட்டத்திற்கு ஏற்ப வழிகாட்டு பவராகி நல்ல முறையில் புரிய வைக்க முடியும். படிப்பிக்கக் கூடிய தந்தையோ நல்ல முறையில் அறிந்துள்ளார். எவ்வளவு விசாலமான எல்லையில்லாத புத்தி உடையவராக ஆக்குகிறார். நாம் யாருடைய குழந்தைகள் ஆவோம் என்ற போதை உங்களுக்கு இருக்க வேண்டும். பகவான் நமக்கு படிப்பிக்கிறார். ஒருவரால் படிக்க முடியவில்லை என்றால் ஓடி விடுகிறார். இவர் என்னுடைய குழந்தை இல்லை என்று பகவானும் நினைக்கிறார். பகவானுடைய குழந்தைகள் படித்து கொண்டிருந்தார் கள், பிறகு ஓடி விட்டார்கள். பிறகு கொஞ்சம் புரிய வரும் பொழுது மீண்டும் படிக்க முற்படு கிறார்கள் என்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். பிறகும் யோகத்தில் நல்ல முறையில் இருந்தார்கள் என்றால் உயர்ந்த பதவியை அடைய முடியும். உண்மையில் நாம் இப்பேர்ப்பட்ட பள்ளிக் கூடத்தை விட்டு விட்டதால் மிகவுமே நேரத்தை வீணாக்கி விட்டோம் என்று உணருவார்கள். இப்பொழுது அவசியம் தந்தையிடமிருந்து ஆஸ்தி பெறுவோம் என்பார்கள். தந்தையை நினைவு செய்து செய்து அல்லது பாபா பாபா என்று கூறி புல்லரித்துப் போய் விட வேண்டும். பாபா நமக்கு உயர்ந்த பதவி பிராப்தி செய்விக்கிறார். நாம் எவ்வளவு பாக்கியசாலி ஆவோம். அடிக்கடி பாபாவின் நினைவு இருந்தால், அறிவுரைப் படி நடந்து கொண்டே இருந்தால் மிகவுமே முன்னேற்றம் ஏற்பட முடியும். பிறகு அவர்களுக்கு அனைவரும் மிகுந்த மதிப்பு கொடுப்பார்கள். படித்தவர்களுக்கு முன்னால் படிக்காதவர்கள் மூட்டை தூக்குவார்கள் என்று பாபா கூறுகிறார். தேக அபிமானம் உடையவர் களுக்கு தெய்வீக குணங்களின் தாரணை ஆக முடியாது. உங்களுடைய முகம் முதல் தரமானதாக இருக்க வேண்டும். யாருக்கு பகவான் படிப்பிக்கிறாரோ அவர்களிடம் அதீந்திரிய சுகம் பற்றி கேளுங்கள் என்று கூறப்படுகிறது. எவ்வளவு படிப்பின் மீது கவனம் கொடுக்க வேண்டி உள்ளது மற்றும் ஸ்ரீமத் படி நடக்க வேண்டி உள்ளது! உங்களுடைய யோக பலத்தினாலே உலகமும் தூய்மையானதாக ஆகி விடும். நீங்கள் யோகத்தினாலே உலகத்தை தூய்மையாக்குகிறீர்கள். அதிசயம் அல்லவா. கோவர்த்தன மலையை ஒரு விரல் கொடுத்து தூக்க வேண்டும். யார் இந்த சீ-சீ உலகத்தை தூய்மையாக ஆக்கினார்களோ இது அவர்களுடைய அடையாளம் ஆகும். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. சத்தியமான ஞானத்தை புத்தியில் தாரணை செய்ய வேண்டும் என்றால் புத்தி என்ற பாத்திரத்தை சுத்தமானதாக தூய்மையானதாக ஆக்க வேண்டும். வீணான

விஷயங்களை புத்தியிலிருந்து நீக்கி விட வேண்டும்.

2. தெய்வீக குணங்களின் தாரணை மற்றும் படிப்பின் மீது முழு கவனம் கொடுத்து அதீந்திரிய சுகத்தின் அனுபவம் செய்ய வேண்டும். நாம் பகவானின் குழந்தைகள், அவரே நமக்கு படிப்பிக்கிறார் என்ற இதே போதையில் எப்பொழுதும் இருக்க வேண்டும்.

வரதானம்: நிச்சயத்தின் அஸ்திவாரம் மூலம் சம்பூர்ண நிலை வரை சென்று, சேரக்கூடிய நிச்சயபுத்தி உள்ள கவலையற்றவர் ஆகுக.

நிச்சயம் என்பது இந்த பிராமண வாழ்க்கையின் நிறைவான நிலை மற்றும் அஸ்திவாரம் ஆகும். மேலும் இந்த அஸ்திவாரம் உறுதியாக இருக்குமானால் சகஜமாகவும் தீவிர வேகத்திலும் சம்பூர்ண நிலை வரை சென்று சேர்வது நிச்சயிக்கப்பட்டதாகும். யார் யதார்த்த நிச்சயபுத்தி உள்ள வராக இருக்கிறார்களோ, அவர்கள் சதா கவலையற்று இருப்பார்கள். யதார்த்த நிச்சயம் என்பது தனது ஆத்ம சொரூபத்தை அறிவது, ஏற்றுக் கொள்வது மற்றும் அதன்படியே நடப்பது மற்றும் பாபா யாராக இருக்கிறார், எப்படி இருக்கிறார், எந்த ரூபத்தில் பார்ட் நடித்துக் கொண்டிருக்கிறார் என்பதை யதார்த்தமாக அறிந்து கொள்வது. அத்தகைய நிச்சயபுத்தி உள்ளவர்கள் தாம் வெற்றியாளராக இருப்பார்கள்.

சுலோகன்: தனது சமயத்தை, சுகங்களை, பிராப்திக்கான ஆசையை அனைவருக்காகவும் தானம் செய்பவர் தாம் மகாதானி ஆவார்.

அவ்யக்த அமைதி மூலம் டபுள் லைட் ஃபரிஸ்தா ஸ்திதியை அனுபவம் செய்யுங்கள்

எப்படி ஆரம்பத்தில் அப்பியாசம் செய்தனர் - சென்று கொண்டிருக்கிறோம். ஆனால் ஸ்திதி அந்த மாதிரி இருக்க வேண்டும் - ஏதோ ஒளி சென்று கொண்டிருப்பதாக மற்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு சரீரம் தென்படாது. இந்த அப்பியாசம் மூலம் தான் ஒவ்வொரு விதமான பரீட்சைப் பேப்பரிலும் பாஸ் ஆனார்கள். ஆக, இப்போது சமயம் மிக மோசமானதாக வந்து கொண்டிருக்கும் போது டபுள் லைட்டாக இருப்பதற்கான அப்பியாசத்தை அதிகப் படுத்துங்கள். மற்றவர்களுக்கு எப்போதும் உங்கள் லைட் ரூபம் தென்பட வேண்டும் - இது தான் பாதுகாப்பு. அவர்கள் உள்ளே வந்ததுமே ஒளியின் கோட்டையைப் பார்க்க வேண்டும்.